செ.வெ.எண்: 02 நாள்: 02.02.2018

**பத்திரிக்கை செய்தி**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒகி புயலால் காணாமல் போனவர் குறித்த அறிவிப்பு**

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாளன்று தாக்கிய ஒகி புயலால் காணாமல் போய்விட்டதாகக் கூறப்படும் நபர் உண்மையிலேயே ஒகி புயலால் காணாமல் போய்விட்டாரா? என்பதை கண்டறிவதற்காக அரசாணை எண். 4, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்துறை, நாள் 12.1.2018-ல் ஒரு குழுவினை அமைத்திட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி அமைக்கப்பட்ட குழு முறையான விசாரணை மற்றும் ஆய்விற்கு பின்னர் கீழ்க்கண்ட நபர் காணாமல் போய்விட்டதாக தெரிவித்துள்ளது. இதனால் கீழ்கண்ட நபர் காணாமல் போய்விட்டதால் அவர் உயிருடன் இல்லை எனக்கருதி, அவ்வாறு காணாமல் போய்விட்ட நபரின் விவரங்கள் பொது மக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது. பொது மக்களில் எவருக்காவது காணாமல் போய்விட்ட நபர் உயிருடன் இருப்பதாக தெரியவந்தால், அதனை சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கோ, வருவாய் கோட்டாட்சியர் அல்லது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியருக்கோ இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 நாட்களுக்குள் தெரிவித்திடலாம் அல்லது கவனத்திற்கு கொண்டு வரலாம்.

இந்த குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் காணாமல் போய்விட்ட நபர் குறித்த விவரம் வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அல்லது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் பெறப்படாவிட்டால், காணாமல் போய்விட்ட நபர் ஒகி புயலால் இறந்துவிட்டதாகவும், அவரைக் கண்டுபிடிக்க இயலாது எனவும் கருதப்படும்.

இவர் மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டிணம் கிராமத்தை சேர்ந்த அ.அழகர் என்பவரது மகன் அ. வீரபாகு, 2686, ராம்நகர் கோட்டைப்பட்டிணம், மணமேல்குடி தாலுகா என்ற முகவரியில் வசத்து வந்துள்ளார். இவர் 22 வயதுடைய, 5.1 மாநிறம் தோராயமாக, பள்ளிச் கான்றிதழில் உள்ளபடி வலது கன்னத்தில் கருப்பு மச்சம் ஆகிய அடையாளங்கள் உடையவர்.



அ.வீரபாகு

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**